**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 541/2022**

**Prosecution Witness: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வி | Caste | : |
| Father 's Name | : தர்மராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**11.10.2023**
**முதல் விசாரணை**

நான் கீழஉரப்பனூரில் குடியிருந்து வருகிறேன். நான் சமத்துவபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது கணவர் எனது நாத்தனார், மற்றொரு பெண்மணி எனது கணவரின் மனைவி ஆவார்கள். எனக்கும் எனது கணவருக்கும் 1998 வது வருடம் ஏப்ரல் மாதத்தில் திருப்பரங்குன்றத்தில் உள்ள ஷீலா கிருஷ்ணாமகாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. எனக்கும் எனது கணவருக்கும் இரண்டு மகன்கள் பிறந்தார்கள். திருமணமான தினத்தில் இருந்தே எனது மாமியார் பேச்சியம்மாள் மற்றும் எனது கணவரின் சகோதரிகள் சுபா மற்றும் தீபா எனது மாமியாரின் உடன்பிறந்தவர்கள் சந்தனம் மற்றும் லிங்கம்மாள் ஆகியோர்கள் சேர்ந்து என்னிடம் பிரச்சினை செய்து எனது கணவருடன் வாழ விடாமல் தொந்தரவு செய்தார்கள். நான் எனது மாத சம்பளத்தை மொத்தமாக எனது கணவரிடம் கொடுத்துவிடுவோம். எனது அன்றாட செலவு மற்றும் அவசர செலவுக்குக் கூட எனது கணவர் பணம் தரமாட்டார். மேற்கூரிய எனது கணவரின் உறவினர்கள் எனது கணவரை தூண்டிவிட்டு என்னுடனும் என் மகன்களுடனும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். நீ பணம் , பொருள்,, நிலம் தராவிட்டால் எனது கணவருக்கு சத்யா என்பவரை 2 வதாக திருமணம் செய்து வைத்துவிடுவதாக கூறினார்கள். 03.04.2015 அன்று எனது கணவருக்குசத்யா என்பவருடன் திருமணம் ஆகிவிட்டது. எனது மாமியாரின் தங்கை லிங்கம்மாள் வீட்டில் அவர்கள் தங்கி இருந்தார்கள். அவர்களுக்கு திருமணம் நடந்த விஷயம் கேள்விபட்டு எனது கணவர் தங்கியிருந்தார். திருமங்கலம் ஜவஹர் நகரில் சென்று கேட்டபோது எனது கணவர் அதை பற்றி பேசினால் உன்னை கொலை செய்துவிடுவோம் என மிரட்டினார். எனக்கு போட்ட 30 பவுன் நகையை கொடுத்துவிடுங்கள் என கேட்டதற்கு எனது கணவர்

என்னையும் எனது மகனையும்அடிக்க வந்தார். எனவே நாங்கள்அந்த இடத்தில் இருந்து சென்றுவிட்டோம்- என்னிடம் காட்டப்படும் புகார் நான் சொல்ல சொல்ல போலிசார்கள் எழுதினார்கள். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 541/2022**

**Prosecution Witness: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கவேல் | Caste | : |
| Father 's Name | : கட்டநல்லதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**11.10.2023**

**முதல் விசாரணை**

நான் மேல உரப்பனூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

அ.சா.1 க்கும் ஆஜர் எதிரி ராஜ்குமாருக்கும் 1998 ல் திருமணம் நடைபெற்றது என்றும் அந்த திருமணத்திற்கு பின்பு எதிரிகள் அனைவரும் சேர்ந்து அ.சா.1 உடல்ரீதியாகவும் மன ரீதியாகவும் கொடுமைப்படுத்தி தகாத வார்த்தைகாளல் பேசி கொலை மிரட்டல்விடுத்து அவரை பெண் என்றும் பாராமல் வன் கொடுமை செய்ததாகவும் அ.சா1 ன் கணவருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைத்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**